# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 10

# பாடத்திட்டம்

தேசிய கல்வி நிறுவகம்
2007

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01 | அறிமுகம் | ii |
| 02 | பாடத்திட்டத்தின் நோக்கங்கள் | iii |
| 03 | பாடத் தேர்ச்சிகள் | iv |
| 04 | பாடசாலைக்கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும் | v |
| 05 | கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் | vi-viii |
| 06 | கணிப்பீடும் மதிப்பீடும் | ix |
| 07 | பாடத்திட்டம் | 1 - 6 |

# தமிழ்மொழியும் இலக்கியமும்
# தரம் - 10

## 01. அறிமுகம்

எவ்விடயத்தைப் பொறுத்தவரையிலும் காலத்துக்கேற்ற மாற்றங்கள் தவிர்க்கமுடியாதனவே.

அவ்வகையில் மொழியும் மொழிமூலமான ஆக்கங்களும் மொழி கற்றல் - கற்பித்தல் முறைகளும் மாற்றம் பெறுவது தவிர்க்க இயலாதது.

இவ்வுண்மையை மனங்கொண்டே கலைத்திட்டங்கள் காலத்துக்குக் காலம் மறுசீரமைக்கப் படுகின்றன. அவ்வகையில் தற்காலத்துக்கேற்றதாக மாணவரிடத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு, பயிற்சி என்பவற்றை விருத்தி செய்யும் நோக்கில் கற்றல் தேர்ச்சிகளை மையமாகக் கொண்டு தேசிய பொதுக் குறிக்கோள்களுக்கும் பொதுத் தகைமைகளுக்கும் அமைவாக இக்கலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

10ஆம் தரத்துக்குரிய தமிழ்மொழிப் பாடத்துக்கான இப்புதிய கலைத்திட்டமானது 2007ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வருகின்றது. இப்பாடத்திட்டத்தில் கேட்டலும் பேச்சும், வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித் திறன்களை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் வயதுக்குரிய கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

அத்தேர்ச்சிகள், மாணவர்கள் மொழியைச் செம்மையாக, ஆக்கபூர்வமாக கையாள்வதற்கும் தமது உள்ளார்ந்த ஆற்றல்களை அறிந்து, அவற்றை மேம்படுத்தி சமூகத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கான தகுதியைப் பெறுவதற்குமான அடிப்படையை வழங்க வல்லனவாகும்.

அத்தேர்ச்சிகளை மையப்படுத்தி வடிவமைக்கப்பட்ட இக்கலைத்திட்டத்துக்கான செயற்பாடுகள் யாவற்றையும் பிரதிபலிப்பதாகப் பாடப்புத்தகம் அமையும் என எதிர்பார்க்கமுடியாது. எனவே ஆசிரியர்கள் பாடப்புத்தகத்தில் மாத்திரம் கவனம் செலுத்தாது கலைத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி அதன் மூலம் பெற்ற தெளிவோடு, ஏற்ற கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 02. பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

- தமிழ்மொழியைத் தொடர்பாடற்கருவியாக காலத்திற்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.

- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார, விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணுதல்.

- கலைகள், அறிவியல், தொழில்நுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.

- மொழியூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.

- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியைச் சாதகமாகக் கொள்ளல்.

## 03. பாடத் தேர்ச்சிகள்

- பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

- சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார்.

- எண்ணக்கருக்களையும் அபிப்பிராயங்களையும் புலப்புடுத்திப் பேசுவார்.

- உயிர்த்துடிப்புள்ள கட்டுருவாக்கச் செயற்றினுடைய வாசகராகச் செயற்படுவார்.

- கிரகித்துப் பொருள் உணர்ந்தமை புலப்பட வாசிப்பார்.

- நடைமுறைத் தேவைகளுக்காக வாசிப்பார்.

- ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார்.

- விருப்பத்திற்கேற்ப வாசிப்பார்.

- அவதானமாகக் கிரகித்து எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்துக்கள், சொற்கள், வாக்கியங்களை வழுவின்றி உரிய நிறுத்தக்குறிகளுடன் தெளிவாக எழுதுவார்.

- பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார்.

- படைப்புகளை வாசித்த அனுபவங்களினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார்.

## 04. பாடசாலைக்கொள்கையும் நிகழ்ச்சித்திட்டமும்

தமிழ்மொழிக் கற்றலானது பாடத்திட்டத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றன்று. பாடசாலை முகாமைக் குழுவினர் பாடத்திட்டத்தின் நோக்கங்கள் எய்தப்படவேண்டிய தேர்ச்சிகளை நன்கு விளங்கிக்கொள்வதுடன், அவற்றினடிப்படையில் பாடசாலைக் கொள்கையை உருவாக்கவும் நடைமுறைப்படுத்தவும் முனைதல் வேண்டும்.

பாடசாலையின் பாடத்திட்டத்தை அமுலாக்கும் போது மாணவர்களின் தனியாள் வேறுபாட்டை மனதிற் கொண்டு மாணவர்களின் தேவையை ஈடுசெய்யும் அவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்க்கவும் பொருத்தமான முறையில் கொள்கை உருவாக்கமும் நிகழ்ச்சித் திட்டமும் அமைய வேண்டும்.

அவற்றிற்கான சில ஆலோசனைகள் இங்கு தரப்படுகின்றன.

1. பாடசாலையிலுள்ள தமிழ்மொழி மூலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாவரும் மொழியாசிரியர் என்ற நோக்கில் செயற்பட வழி செய்தல்.

2. பாடசாலையைச் சூழவுள்ள பிரதேசத்திலுள்ள தமிழ்மொழிசார் வளங்களை மாணவர்களின் மொழிவிருத்திக்காக உச்ச அளவில் பயன்படுத்துதல்.

3. இலக்கிய மன்றங்கள் போன்ற மாணவர் மன்றங்களை வகுப்பு ரீதியாக அமைத்து மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வளர்க்க உதவுதல்.

4. பாடசாலை மட்டத்தில் விவாதம், கவியரங்கு, பட்டிமன்றம், இலக்கியப் போட்டி, பொது அறிவுப்போட்டி போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

5. பெரியார்களை அழைத்து இலக்கியசி சொற்பொழிவுகளை நடாத்துதல்.

6. நூல் நிலையங்களில் மொழி இலக்கியம் சார்ந்த நூல்களை களஞ்சியப்படுத்தல். வாசித்த இலக்கிய நூல்களில் இருந்து பெற்ற விடயங்களை கலந்துரையாடுவதற்கு ஏற்பாடு செய்தல்.

7. ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலே சிறுகதை, நாடகம், கவிதை போன்றவற்றை எழுதுவதற்குப் போட்டிகளை நடாத்துதல். சுவரொட்டிகள், விளம்பரங்கள் என்பன எழுதுவதற்கான போட்டிகளை நடாத்துதல்.

8. பாடசாலை அமைந்துள்ள பிரதேசத்திற்குரிய கூத்துகள், நாடகங்கள் போன்ற சிறப்பான கலையம்சங்களையறிந்து அவற்றைப் பாடசாலை மன்றங்களினூடாக மேடையேற்றுவதன் மூலம் பிரதேசக் கலைப்பாரம்பரியங்களை வளர்க்க வழிசெய்தல்.

9. கலைவிழாக்களை ஒழுங்குசெய்தல். பங்குபற்றுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

10. சஞ்சிகை வெளியிடல். ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல் என்பவற்றிற்கு ஊக்கமளித்தல்.


Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 05. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

இப்புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் போது பின்வரும் அணுகுமுறைகளைக் கையாள்வது பொருத்தமானதாகும்.

- அடிப்படை மொழித்திறன்களான கேட்டலும் பேச்சும், வாசிப்பு, எழுத்து ஆகியவற்றுக் கான தேர்ச்சிகள் இப்பாடத்திட்டத்தில் தனித்தனியாக வழங்கப்பட்டிருந்தாலும், வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகளின் போது ஒன்றிணைக்கப்பட்டே கற்பிக்கப்பட வேண்டும். இந்த அடிப்படையிலேயே இக்கலைத்திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

- கற்றல் என்பது கட்டுருவாக்கச் செயன்முறையாக அமைய வேண்டும் என்பதே இன்றைய கல்வி நிலைப்பாடாகும். எனவே, கற்பித்தலைப் பார்க்கிலும் கற்றலுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். எனவே தான் கற்போனை மையப்படுத்தி இக்கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

- இக்கலைத்திட்டம் செயற்பாடுகள் சார்ந்த கற்றலுக்கு வழியமைக்கின்றது. கற்றலின் போது மேற்கொள்ள வேண்டிய பல்வேறு செயற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பினும் பெறத்தக்க வளங்களை கவனத்திற் கொண்டு அவற்றுக்கேற்ப மேலதிக செயற்பாடு களை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஆசிரியர்கள் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது பின்வரும் ஐந்து படிகளையும் அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.
    1. கற்றலுக்கான பிரவேசம் (Engagement)
    2. வெளிக்கொணர்தல் (Exploration)
    3. விளக்கமளித்தல் (Explanation)
    4. விரிவாக ஆராய்தல் (Elaboration)
    5. மதிப்பீடு (Evaluation)

  செயற்பாட்டின் முதற் கட்டத்தில் கற்றலுக்கான பிரவேசமும் மாணவர் ஆயத்தமும் நிகழுகின்றது. இங்கு முன்னறிவை மீட்டல், பாடவிடயத்துக்கு மாணவர்களின் ஆர்வத்தை ஈர்த்தல் என்பவற்றோடு தேவையான அடிப்படை விடயங்களை வழங்குவதும் எதிர்பார்க்கப்படுகிறது.

  இரண்டாவது கட்டமான ''வெளிக்கொணர்தல்' இன் போது மாணவர்கள் குழுச் செயற்பாட்டில் ஈடுபட்டுத் தேவையான விடயங்களைக் கண்டுகொள்வது எதிர்ப்பார்க்கப் படுகிறது. இங்கு குழுவினுள் கூட்டாக இயங்கி, ஒருமித்துச் செயற்படுவதற்கும், தனது அறிவைக் குழு அங்கத்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதோடு தனது அறிவை மேலும் விருத்தி செய்து கொள்வதுவும் எதிர்பார்க்கப்படுகிறது.

  மூன்றாவது கட்டமான ''விளக்கமளித்தலின்'' போது மாணவர்களின் தொடர்பாடும் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் மாணவர்கள் குழுக்களில் வெளிக்கொணர்ந்த விடயங்களை ஏனைய குழுக்களுக்குச் சமர்ப்பிக்கும் செயல் நடைபெறுகிறது. இக்கட்டத்தில் ஏனைய குழுக்களின் கருத்துக்களும் எதிர்பார்க்கப்படுகிறது.



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

நான்காம் கட்டமான ''விரிவாக ஆராய்தலின்'' போது ஏனைய குழுக்களின் கருத்துக் களையும் கவனத்திற் கொண்டு பாடவிடயங்களை விருத்தி செய்து கொள்வதோடு எல்லாக் குழுக்களும் வெளிக்கொணர்ந்த விடயங்களை செயற்பாட்டின் நோக்கம் நிறைவேறும் வகையில் ஆசிரியர் தொகுத்துக் கூறுவது எதிர்பார்க்கப்படுகிறது.

ஐந்தாம் கட்டமாக அதாவது இறுதிக்கட்டமாக அமைவது மாணவர்களை மதிப்பீடு செய்தலும் கணிப்பீடு செய்தலுமாகும். இது இறுதிக்கட்டமாகக் குறிப்பிட்டாலும் ''வெளிக்கொணர்தல்'' கட்டத்திலிருந்தே கணிப்பீடு ஆரம்பமாகிறது. இதற்காக புறம்பான நேரம் ஒதுக்கப்படுவதில்லை.

மாணவர்கள் தொழிற்படும்போதே ஆசிரியர் கணிப்பீட்டை மேற்கொள்வது அவசியமாகும். இக்கணிப்பீட்டின்போது, கற்றல் - கற்பித்தல் நடடிவடிக்கைகள் உறுதி செய்யப்படுவதற்கு ஆசிரியர் மாணவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

- பயன்பாட்டு இலக்கணமும் மொழிவளமும் தனித்தனித் தேர்ச்சிகளாக வழங்கப்பட்டி ருப்பினும், அடிப்படை மொழித் திறன்களை மையமாகக் கொண்டு கற்கும் போதே இவற்றையும் தொடர்புபடுத்திக் கற்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. அதாவது இலக்கணத்தைத் தனித்துக் கற்பிக்காது பாடத்தின் (Text) ஊடாகக் கற்பித்தல் வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 5.1 உத்தேச செயற்பாடுகள்

- கலந்துரையாடல்
- குழுவேலை
- சோடி வேலை
- நாடகம்
- ஒப்படைகள்
- களவேலை
- பங்கேற்று நடித்தல்
- பாத்திரமேற்று நடித்தல்
- வினா விடை

## 5.2 தர உள்ளீடுகள்

- பாடல்கள், கவிதைகள், செய்யுட்கள்
- கதைகள்
- நாடகங்கள்
- உரையாடல்கள்
- உரைச்சித்திரங்கள்
- கட்டுரைகள்
- சொல்லட்டைகள்
- கதைப்படங்கள்
- படங்கள்
- துண்டுப்பிரசுரம்
- அறிவித்தல்
- விளம்பரம்
- சுவரொட்டி
- சித்திரங்கள்
- பதாகைகள்
- துணுக்குகள்
- வானொலி
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- தொலைக்காட்சி
- மேற்றலை எறியி (OHP)
- கணினி
- இறுவட்டு
- பேனை, பென்சில், போன்ற செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பொருட்கள்


Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 06. கணிப்பீடும் மதிப்பீடும்

நாளாந்தம் வகுப்பறை கற்றலின் போதும் பாடமுடிவிலும் தவணைப் பரீட்சைகள், இறுதிப்பரீட்சைகளின் போதும் மாணவர்களின் கற்றல் அடைவு மதிப்பீடு செய்யப்படும்.

- பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் போது வகுப்பறையில் மாணவர்களின் நாளாந்த கற்றல் நடவடிக்கைகளை மதிப்பிட்டுக் கொள்வதும் தேவையான பின்னூட்டல் களை வழங்குவதும் முக்கியமான விடயம் என்பதை ஆசிரியர்கள் மனங்கொள்ள வேண்டும்.

- இப்புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் கற்றல் தேர்ச்சிகளின் அடைவுகளே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

- வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது அடிப்படை மொழித் திறன்களின் விருத்தியில் கூடிய கவனம் செலுத்துவதுடன், அறிவு, திறன், மனப் பாங்கு, பயிற்சி ஆகியவற்றின் விருத்தியிலும் கவனம் செலுத்தி கற்றல் தேர்ச்சி அடைவை மதிப்பிட வேண்டும்.

- பாடசாலை மட்டக் கணிப்பீடானது மாணவர்களின் முதிர்ச்சி, விருப்பம் என்பவற்றி னைக் கவனத்திற் கொண்டு மொழித்திறன்களை விருத்தி செய்யும் வகையில் அமைய வேண்டும்.

- பாடசாலை சார் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமானது மாணவர்கள் குழுக்களாகச் செயற்படுகின்றபோது அதாவது வெற்றி வெற்றி (win win) என்ற கோட்பாட்டை மையமாகக் கொண்டமைந்த செயல்திட்டங்களினூடாகக் கற்றல் தேர்ச்சிகளையும் மொழித்திறன்களையும் விருத்தி செய்வதாக அமைய வேண்டும்.

- மாணவர்களுக்குப் பொருத்தமான செயல் திட்டங்களைக் குழுநிலையிலும், தனியாள் நிலையிலும் மேற்கொள்ளுவதற்குப் பொருத்தமான பாடப்பரப்பை மாணவர் தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிப்பதோடு அதற்கான வழிகாட்டல்களை ஆசிரியர்கள் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- கற்றல் என்பது தனியாள் நிலையிலும் குழு நிலையிலும் உறுதி செய்வதாக அமைய வேண்டும். ஆசிரியர், தமது கற்பித்தல் செயன்முறைகளின் போது தனியாள் அடிப்படையில் அதிகளவு கவனத்தைச் செலுத்துவதனூடாகவே ஒவ்வொரு மாணவனதும் தேர்ச்சி அடைவினை உறுதி செய்து கொள்ள வேண்டும்.


Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# தமிழ்மொழியும் இலக்கியமும்
# பாடத்திட்டம் : தரம் - 10

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## பாடத்திட்டம் : தரம் - 10
### தேர்ச்சி, தேர்ச்சி அலகுகள், உள்ளடக்கம்

| **கேட்டலும் பேச்சும் :** | **பாட வேளை** |
|---|---|
| 1.0 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | |
| 1.1 கேட்டுக் கிரகித்தவற்றைவற்றைத் திரட்டிக் கூறுவார்.<br>- மேடைப் பேச்சு<br>- கருத்தரங்கு | 05 |
| 1.2 கிரகித்துப் பொருள் அறிந்து ஓதுவார்.<br>- செய்யுள்கள், பாடல்கள் | 02 |
| 1.3 செவிமடுத்துக் கிரகித்துக் கருத்துக்களை முன்வைப்பார்.<br>- செய்யுளின் பொருளைக் கூறுதல்<br>- உரைநடையின் மையக்கருத்தையும், துணைக் கருத்துக்களையும் தொகுத்துக் கூறுதல்.<br>- கிரகித்த விடயத்துக்குச் சார்பாக/எதிராக தமது கருத்துக்களை முன்வைத்தல்.<br>-நயந்தவற்றை விளக்கிக் கூறல். | 06 |
| 1.4 செயற்றிறனும் விளைதிறனும் உள்ள கட்டுருவாக்கச் செயன்முறை சார்ந்த கேட்போனாகச் செயற்படுவார்.<br>- கேட்டலில் விருப்பத்துடன் ஈடுபடுதல்.<br>- கேட்டவற்றின் உண்மைத் தன்மையை அறிதல்.<br>- கேட்டுக் கிரகித்துக் குறிப்பெடுத்தல்.<br>- கேட்டு விளங்கி ஒரு முடிவுக்கு வருதல்.<br>- பேச்சாளர் பேசிக்கொண்டிருக்கையில் அவர் தொடர்ந்து பேசப்போவனவற்றை முன்கூட்டியே ஊகித்தல்.<br>- கேட்டல் மூலம் பல்வேறு தேவைகளுக்கான தரவுகளைச் சேகரித்தல்.<br>- கேட்டவற்றில் தகவல்கள் எவை, அபிப்பிராயங்கள் எவை என வேறுபடுத்துதல். | 06 |
| 2.0 சந்தர்ப்பத்திற்கும் சூழ்நிலைக்கும் கேட்போருக்கும் ஏற்ற வகையில் பண்பாக உரையாடுவார். | |
| 2.1 தமது உணர்வுகளும், கருத்துக்களும், அபிப்பிராயங்களும் தெளிவாகப் புலப்படும் வயில் உரையாடுவார்.<br>- விடயத் தெளிவு.<br>- கருத்துக்களை அறிந்துகொள்ளல்.<br>- முறையிடல்.<br>- தகவல் தெரிவித்தல்.<br>- விவரங்களை விவரித்தல்.<br>- பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்தை வலியுறுத்திக் கூறுதல்.<br>- தனியாள் நிலையிலும், குழு நிலையிலும் கருத்துப் பரிமாற்றம் செய்தல்.<br>- கலந்துரையாடலின் பங்குபற்றி ஏற்றவகையில் தமது கருத்துக்களை முன்வைத்தல்.<br>- எடுத்துக்கொண்ட விடயங்களைத் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் விவரித்தல். | 06 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | பாட வேளை |
|---|---|
| - தமது விருப்பு வெறுப்புக்களைப் பண்பாக வெளிப்படுத்துதல். | |
| - குறித்த விடயம் சார்ந்த அறிவுள்ளோருடன் உசாவி அறிந்த விடயங்களை வகுப்பறையில் தொகுத்துக் கூறுதல். | |
| 2.2 நாடக பாத்திரங்களுக்கேற்ப, நடித்துப் பேசுவார். | 04 |
| - பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உச்சரிப்புத் தெளிவுடனும்பொருத்தமான தொனி, முகபாவம், மெய்ப்பாடு, அங்க அசைவுகளுடன் உரையாடுதல். | |
| 3.0 எண்ணக் கருத்துக்களையும், அபிப்பிராயங்களையும் புலப்படுத்திப் பேசுவார். | |
| 3.1 தலைப்புக்கு ஏற்றவகையில் பேசுவார். | 04 |
| - தலைப்பு ஒன்றினைத் தெரிவு செய்தல். | |
| - கருத்தை முன்வைத்தலுக்குப் பொருத்தமான சட்டகத்தை அமைத்தல். | |
| - இலக்கினை அமைத்துப் பேசுதல். | |
| - நோக்கத்துக்கும் சபைக்கும் ஏற்றவாறு பேசுதல். (மேடைப்பேச்சு, விவாதம், பட்டிமன்றம்) | |
| - கேட்போர் புரியும் வகையில் பேசுதல். | |
| - பொருத்தமான தொனியில் பேசுதல். | |
| - குறுகிய நேர ஆயத்தத்துடன் பேசுதல். | |
| - பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், மேற்கோள்கள் முதலானவற்றைக் கையாண்டு பேசுதல். | |
| 3.2 பாவனை செய்து பேசுவார். | 02 |
| - வானொலி, தொலைக்காட்சிச் செய்தி வாசித்தல். | |
| - நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குதல். | |
| - நேர்முக வர்ணனை செய்தல். | |
| **வாசிப்பு** | |
| 4.0 உயிர்த்துடிப்புள்ள, கட்டுருவாக்கச் செயல்திறனுடைய வாசகராகச் செயற்படுவார். | |
| 4.1 விளக்கத்தோடும் பொருளுக்கேற்ற உணர்ச்சியோடும் வாசிப்பார். | 03 |
| - செய்யுள்களையும், கவிதைகளையும், பல்வேறு வசனப் பகுதிகளையும் பொருத்தமான பாணியையும், நுட்பத்தையும் கையாண்டு உணர்வு பூர்வமாக வாசித்தல். | |
| 4.2 வாசிப்பதன் மூலம் இலக்கியத்துக்கும் சமூகத்துக்குமிடையிலான தொடர்பை அறிவார். | 03 |
| - தன்னையும், தனது குடும்பத்தையும், தான் சார்ந்த சமூகத்தையும், தான் வாழும் உலகினையும் இலக்கிய வாசிப்பினூடாக விளங்கிக் கொள்ளுதல். | |
| 5.0 கிரகித்துப் பொருள் உணர்ந்தமை புலப்பட வாசிப்பார். | |
| 5.1 கிரகித்துப் பொருள் அறிந்து வாசிப்பார். | 03 |
| - கருத்தைக் கண்டுகொள்வதற்கான உபாயங்களைப் பயன்படுத்தி வாசித்தல் | |
| - தேவைக்கேற்ப மேலோட்டமாகவும், கருத்தூன்றியும் வாசித்தல் | |
| - முழுக்கவனத்தையும் செலுத்தி வாசித்தல். | |
| - முன்னைய அறிவு, அனுபவம், விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் வாசித்துக் கருத்துக்களை உள்வாங்குதல். | |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | | பாட வேளை |
|---|---|---|
| 5.2 | குறித்த நோக்கத்திற்காக வாசிப்பார்.<br>- மையக் கருத்தையும் துணைக் கருத்தையும் கண்டுகொள்ளுதல்.<br>- செய்யுளை சந்திபிரித்தும் கொண்டு கூட்டியும் வாசித்தல்.<br>- செய்யுளின் பொருளைக் கூறுதல்.<br>- வாசித்தவற்றை சொந்த மொழிநடையில் கூறுதல்.<br>- வாசித்த பகுதியைச் சுருக்கியும் விரித்தும் கூறுதல்.<br>- வாசித்தவற்றில் விடயங்கள் குறித்த உடன்பாட்டையும் உடன்பாடின்மையையும் அவற்றுக்கான காரணங்களையும் முன்வைத்தல்.<br>- பாத்திரங்களின் குணவியல்பை விவரித்தல்.<br>- பாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படும் படைப்பாளியின் எண்ணங்களைக் கிரகித்துக் கூறுதல்.<br>- படைப்புக்கு உந்துசக்தியாக விளங்கிய காரணிகளைக் கூறுதல் (படைப்பாளியின் அனுபவம், கலை, கலாசார சமூகப் பின்னணி) | 05 |
| 6.0 | நடைமுறைத் தேவைகளுக்காக வாசிப்பார். | |
| | 6.1 பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார்.<br>(மகிழ்ச்சி, மனப்பாங்கு விருத்தி, சிந்தனை விரிவு, தெளிவு, தகவல் சேகரித்தல்/ அறிதல், மதிப்பீடு)<br>- சுவரொட்டிகள்<br>- துண்டுப் பிரசுரங்கள்<br>- பத்திரிகை<br>- சஞ்சிகைகள்<br>- நூல்கள்<br>- இணையம்<br>- கலைக்களஞ்சியம்<br>- அகராதி<br>- சுற்றறிக்கைகள்<br>- வர்த்தமானி | 03 |
| 7.0 | ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக வாசிப்பார். | |
| 7.1 | பல்வேறு படைப்புகளை நுணுகி வாசித்து, அவற்றில் கையாளப்பட்டுள்ள உத்திகள், கருத்துக்கள் என்பனவற்றை விமர்சிப்பார்.<br>- கவிதை, செய்யுள்<br>- உரைநடை<br>- நாவல்<br>- சிறுகதை<br>- நாடகம் | 04 |
| 7.2 | மொழித் திறன்களை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.<br>- ஆக்கங்களிலுள்ள பிரதேச வழக்குச் சொற்கள்<br>- மொழிநடை வேறுபாடுகள்.<br>- அணிகள்<br>(உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, சிலேடை)<br>- தொடர்மொழிகள் | 03 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | | பாட வேளை |
|---|---|---|
| 7.3 | தரப்பட்ட பாடப்பரப்புகளில் வருகின்ற பயன்பாட்டு இலக்கணத்தை இனங்கண்டு பயன்படுத்துவார்.<br>- வினையாலணையும் பெயர்<br>- வேற்றுமை உருபு<br>- சொல்லுருபு<br>- இடைச்சொற், உரிச்சொற்<br>- வாக்கிய வகைகள் (கலப்பு, கூட்டு வாக்கியங்கள்)<br>- தொகை, தொகா நிலைத் தொடர்கள்<br>- சொற்புணர்ச்சி (உயிர்முன் உயிர், உயிர்முன் மெய், மெய்முன் மெய், மெய்முன் உயிர்) | 10 |
| 8.0 | ஆர்வத்துடன் வாசிப்பார். | |
| 8.1 | விருப்பத்திற்காகவும் சுவையுணர்விற்காகவும் வாசிப்பார்.<br>- கதைகள், சிறுகதைகள், கவிதைகள், செய்யுள்கள்<br>- நாட்டார் பாடல்களும், கதைகளும்<br>- நாவல்கள்<br>- நாடகங்கள்<br>- கட்டுரைகள் | 03 |
| 8.2 | ஆக்கங்களை வாசித்துப் பெற்ற அனுபவங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வார்.<br>- உள்ளடக்கம்<br>- பாத்திர இயல்பு<br>- மொழியாட்சி<br>- வர்ணனை<br>- ஓசை நயம்<br>- கற்பனை<br>- அணிகள் (உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம், உயர்வு நவிற்சி, சிலேடை)<br>- நயந்த பகுதிகள் | 03 |

## எழுத்து

| | | |
|---|---|---|
| 9.0 | அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்து இலக்கண வழுவின்றித் தெளிவாக எழுதுவார். | |
| 9.1 | கிரகித்து எழுதுவார்.<br>- குறிப்பெடுத்தவற்றை சொந்த நடையில் விரித்தெழுதுதல் (வகுப்பறைக் குறிப்புகள், நூலகத்தில் வாசித்துக் குறிப்பெடுத்த விடயங்கள், மேடைப்பேச்சுக்களில் எடுத்த குறிப்புக்கள்) | 05 |
| 9.2 | பாடப்பரப்புகளில் இனங்கண்டு விளங்கிக் கொண்ட பயன்பாட்டு இலக்கணத்தைப் பொருத்தமாகப் பிரயோகிப்பார்.<br>- வினையாலணையும் பெயர்<br>- வேற்றுமை உருபு<br>- சொல்லுருபு<br>- இடைச்சொற், உரிச்சொற்<br>- வாக்கிய வகைகள் (கலப்பு, கூட்டு வாக்கியங்கள்)<br>- தொகை, தொகா நிலைத் தொடர்கள்<br>- சொற்புணர்ச்சி (உயிர்முன் உயிர், உயிர்முன் மெய், மெய்முன் மெய், மெய்முன் உயிர்) | 10 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | பாட வேளை |
|---|---|
| 9.3 குறிப்பெடுத்தல்<br>- பரீட்சைக்காக<br>- வகுப்பறைச் செயற்பாடுகளுக்காக<br>- போட்டிகளுக்காக<br>- சுய ஆக்கங்களுக்காக<br>- பிற தேவைகளுக்காக | 03 |
| 9.4 கிரகித்த விடயங்களைச் சுருக்கி எழுதுதல்<br>- பந்திகளைச் சுருக்கி எழுதுதல்<br>- ஆக்கங்களைக் கிரகித்துப் பிரதான கருத்துக்களைச் சுருக்கி எழுதுதுல் (சிறுகதை, நாடகம், கட்டுரை) | 05 |
| 9.5 வாசித்துக் கிரகித்தவற்றைத் தமது மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.<br>- மையக் கருத்து, துணைக்கருத்துகள்<br>- செய்யுளின் பொருள்<br>- வினாக்களுக்கு விடை<br>- பாடலில் நயந்தவை<br>- கதாபாத்திரங்களின் குணப்பண்புகள்<br>- படிப்பினைகள், விழுமியங்கள்<br>- அணிகள் | 08 |
| 9.6 எழுத்தாக்கத்தில் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்துவார்.<br>- கருத்துக்களை ஒழுங்கமைத்தல்.<br>- அனுபவங்கள், அவதானிப்புகள், அபிப்பிராயங்கள், எண்ணங்கள் ஆகியவற்றை எழுத்தாக்கத்துக்கு மூலங்களாகப் பயன்படுத்துதல்.<br>- பொருளுக்கும், வாசகர்களுக்கும் பொருத்தமான எழுத்தாக்கச் சட்டகத்தைப் பயன்படுத்துதல்.<br>- கருத்துப் புலப்பட எழுதுதல், மீள நோக்குதல், மேலும் தேவையானவற்றைச் சேர்த்தல், தேவையற்றவற்றை நீக்கல், நிறைவாகத் திருத்தமாக எழுதுதல். | 04 |
| 9.7 கிரகித்த விடயங்களை விமர்சித்து எழுதுவார்.<br>- பார்த்த, கேட்ட நாடகங்கள்<br>- சிறுகதை<br>- நாவல்<br>- கவிதை<br>- திரைப்படம் | 05 |
| 10.0 பல்வேறு சந்தர்ப்பங்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்றவாறு எழுதுவார். | |
| 10.1 நாளாந்தத் தேவைகளுக்காக எழுதுவார்.<br>- கடிதம் (பத்திரிகை ஆசிரியருக்கு)<br>- அறிவுறுத்தல்<br>- அழைப்பிதழ் (விளையாட்டுப்போட்டி, கலைவிழா, நூல் வெளியீடு)<br>- படிவம் நிரப்புதல் (வங்கி, தபாலகம், போட்டிப் படிவங்கள்)<br>- சுய விவரக்கோவை தயாரித்தல் | 07 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

| | | பாட வேளை |
|---|---|---|
| 10.2 | பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.<br>- எண்ணங்களை வெளிப்படுத்தல்<br>- அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் முன்வைத்தல்<br>- விவரித்தல்<br>- முறையிடல்<br>- தகவல் தெரிவித்தல்<br>- வர்ணித்தல்<br>- முன்வரைபு (Draft)<br>- வரிசைப்படுத்தல் | 08 |
| 11.0 | படைப்புகளை வாசித்த அனுபவங்களினூடாக சுய ஆக்கங்களை எழுதுவார். | |
| 11.1 | பந்தி எழுதுவார்.<br>- தலைப்பு<br>- தலைமை வாக்கியங்கள்<br>- துணைவாக்கியங்கள்<br>- முடிவு | 03 |
| 11.2 | குறிப்பெடுத்த விடயங்களைத் தேவைக்கும் வாசகருக்கும் பொருத்தமான வடிவத்தில் வெளிக்கொணர்வார்.<br>- கட்டுரை<br>- பேச்சு<br>- கவிதை/செய்யுள் | 06 |
| 113 | சுய அனுபவங்கள், அபிப்பிராயங்கள், அவதானிப்பு, கருத்துகளை வெளிப்படுத்தி எழுதுவார்.<br>- கட்டுரை (விவரணம்)<br>- செய்யுள்/பாடல்/கவிதை<br>- சிறுகதை<br>- நாடகம் | 06 |



Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.